**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை :** திருமதி **V.** பார்கவி**, B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது வருடம் சித்தரை மாதம் 07ஆம்நாள்

------

**<u>அசல் வழக்கு எண்.103/2019- ல் இடைமனு எண்.02/2021</u>**

1. லெட்சுமி
2. ஜீவபாலன் ...மனுதாரர்கள்/வாதிகள்

...எதிர்...

1. முருகேசன்
2. திரிபுரசுந்தரி

..எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 06.04.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. தியாகராஜன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு எஸ். முத்துக்குமார் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக்கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த அசல் வழக்குஎண். 103/2019 வழக்கை இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண். 124/2019 வழக்குடன் சேர்த்து ஒன்றாக விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச. பிரிவு 151-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. அதே போல் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இந்த மனுவின் மனுதாரர்கள்/வாதிகள் மீது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.

124/2019 என்ற வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி இரண்டு வழக்குகளிலும் உள்ள தாவா சொத்தும், பரிகாரம் மற்றும் தரப்பினர்கள் ஒரே மாதிரியாக இருப்பதால் இந்த இரண்டு வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து விசாரணை செய்ய வேண்டியது அவசியமானது. எனவே இந்த அசல் வழக்கு எண்.103/2019 என்ற வழக்கை இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண். 124/2019 என்ற வழக்குடன் ஒன்றாக சேர்த்து விசாரணை செய்ய உத்தரவிடக் கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. **<u>2-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1-ம் எதிர்மனுதாரரால் தன்னுடையதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. அசல் வழக்கு எண். 124/2019 தாக்கல் செய்வதற்கு முன்பாக மனுதாரர்களால் இந்த அசல் வழக்கு எண். 103/2019 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை மனுதாரர்கள் விருப்பப்பட்டிருந்தால் வழக்கு விசாரணையை ஆரம்பித்து இருக்கலாம். அவ்வாறு மனுதாரர்கள் விசாரணையை துவக்காமல் அதற்கு பிந்தய காலத்தில் எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் விசாரணையை ஆரம்பித்த பின்பு இந்த மனு தாக்கல் செய்திருப்பது சரியல்ல. இந்த வழக்கின் வாதிகள், பிரதிவாதிகள் வேறு அசல் வழக்கு எண்.124/2019-ன் வாதி, பிரதிவாதிகள் வேறு. இந்த வழக்கின் வழக்குமூலமும் அசல் வழக்கு எண். 124/2019 என்ற வழக்கின் வழக்குமூலமும் வேறு. எனவே இந்த அசல் வழக்கை அ.வ.எண்.124/2019 வழக்குடன் ஒன்றாக நடத்த வேண்டும் என்ற இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4.. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

1. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில்

உள்ளது என்றும், அதே போல் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இந்த மனுவின் மனுதாரர்கள்/ வாதிகள் மீது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண். 124/2019 என்ற வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி இரண்டு வழக்குகளிலும் உள்ள தாவா சொத்தும், பரிகாரம் மற்றும் தரப்பினர்கள் ஒரே மாதிரியாக இருப்பதால் இந்த இரண்டு வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து விசாரணை செய்ய வேண்டியது அவசியமானது என்றும், எனவே இந்த அசல் வழக்கு எண்.103/2019 என்ற வழக்கை இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண். 124/2019 என்ற வழக்குடன் ஒன்றாக சேர்த்து விசாரணை செய்ய உத்தரவிடக் கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கு எண். 124/ 2019 தாக்கல் செய்வதற்கு முன்பாக மனுதாரர்களால் இந்த அசல் வழக்கு எண். 103/2019 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை மனுதாரர்கள் விருப்பப்பட்டிருந்தால் வழக்கு விசாரணையை ஆரம்பித்து இருக்கலாம் என்றும், அவ்வாறு மனுதாரர்கள் விசாரணையை துவக்காமல் அதற்கு பிந்தய காலத்தில் எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் விசாரணையை ஆரம்பித்த பின்பு இந்த மனு தாக்கல் செய்திருப்பது சரியல்ல என்றும், இந்த வழக்கின் வாதிகள், பிரதிவாதிகள் வேறு அசல் வழக்கு எண்.124/2019-ன் வாதி, பிரதிவாதிகள் வேறு என்றும், இந்த வழக்கின் வழக்குமூலமும் அசல் வழக்கு எண். 124/2019 என்ற வழக்கின் வழக்குமூலமும் வேறு என்றும், எனவே இந்த அசல் வழக்கை அ.வ.எண்.124/2019 வழக்குடன் ஒன்றாக நடத்த வேண்டும் என்ற இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன, வழக்குக் கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள்/ வாதிகள் இந்த அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.124/2019 உடன் ஒன்றாக சேர்த்து விசாரணை செய்ய வேண்டும் என்று இம்மனுவில் கோரியுள்ளார்கள். எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த அசல் வழக்கு எண்.103/2019 ஆனது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.124/2019 வழக்கிற்கு முந்தைய வழக்கு என்றும், இரு வழக்குகளின் தரப்பினர்கள்

வேறு என்றும் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் இரண்டு வழக்குகளிலும் தரப்பினர்கள் எண்ணிக்கையில் மாறுபாடு உள்ளதே தவிர இரண்டு வழக்குகளிலும் உள்ள தரப்பினர்களின் உறவுமுறையும், நபர்களும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதால் தரப்பினர்கள் வேறு வேறு என்று கருத முடியாது. மேலும் வழக்கின் வழக்குமூலமும் ஒரே தாவா சொத்தை பொறுத்து எழுந்துள்ளதாகவும், இரண்டு வழக்குகளிலும் ஒரே பரிகாரமான நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்தைதான் கோரியுள்ளார்கள் என்பதும் தெளிவாகிறது. மேலும் இந்த அசல் வழக்கு எண்.103/2019 மற்றும் அசல் வழக்கு எண்.124/2019-ன் வழக்குச்சொத்து ஒன்று என்பதைப்பொறுத்து எதிர்மனுதாரர்கள்தரப்பில் ஆட்சேபணை எதுவும் செய்யப்படவில்லை. இந்த அசல் வழக்கு எண்.103/2019 வழக்கை அசல் வழக்கு எண்.124/ 2019 வழக்குடன் ஒன்றாக சேர்த்து விசாரணை செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. எனவே இந்நிலையில் இந்த அசல் வழக்கு எண்.103/2019 வழக்கை அசல் வழக்கு எண். 124/2019 என்ற வழக்குடன் ஒன்றாக சேர்த்து விசாரணை நடத்தினால் நீதிமன்றத்தின் நேரம் மிச்சமாகும் என்பதுடன், அவ்வாறு இரண்டு வழக்குகளையும் சேர்த்து விசாரணை செய்யும்போது மேற்படி இருவழக்குகளிலும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தீர்ப்புகள் ஏற்படுவதை தவிர்க்க முடியும் என்றும், ஒரே பொருண்மையின் அடிப்படையிலான வழக்குகளில் இருவேறுபட்ட தீர்வுகள் ஏற்படுவதை தவிர்க்க முடியும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்நிலையில் இந்த அசல் வழக்கு எண். 103/2019 வழக்கை எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 124/2019 என்ற வழக்குடன் சேர்த்து ஒன்றாக விசாரணை செய்வதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிப்பது என்றும், மனுவின் தன்மை கருதி செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகிறது.

9. முடிவில், இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> - இல்லை-

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> - இல்லை-

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> -இல்லை-

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> -இல்லை-

மா.உ.நீ.

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 103/2019-ல்
இடைமனு எண்.02/2021
நாள் - 20.04.2022.